DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.352/2024

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | தில்லைக்கரசி |
| Father's Name | : | கருப்பண்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் தாந்தோணிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.05.2024ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சண்முகானந்த வடிவேல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, கனகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று

நிலைய கு.எண்.241/2024, ச.பி.379 இதசவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு மறுநாள் சம்பவ இடம் சென்று நந்த குமார், கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர், மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** பின்னர், சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிய வந்ததன்பேரில் எதிரி சிவக்குமார் (எ) கிஷாபாய் மற்றும் சாரதி (எ) பீமா சாரதி 08.05.2024ம் தேதி 02.00 மணியளவில் ராயனூர் பஸ்டாப் அருகே இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தவர்களை விசாரித்தபோது, அவர்கள் முன்னுக்குபின் முரணாக கூறியவர்களை காரணம் கூறி கைது செய்து முருகன், ஆனந்த ராஜ் முன்னிலையில் விசாரித்தபோது சிவக்குமார் (எ) கிஷாபாய் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான தாங்கள் என்னுடன் வந்தால் 18.03.2024ம் தேதி 14.04.2024ம் தேதி நின்றுகொண்டிருந்த டுவீலரிலிருந்து செல்போன்களை திருடிய இடங்களை அடையாளம் காட்டுவேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி ஆஜர்படுத்திய விவோ வி22 செல்போனை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் சண்முகானந்தா வடிவேல் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையை

முடித்து  எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரைப் பெற்று எதிரிகள் மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகசர், வரைபடம், கைப்பற்றுதல் மகசர் போன்ற ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றாலும், எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றாலும், வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**